பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

மகாத்மா காந்தியடிகளின் வாரப் பத்திரிகை

41 ] சென்னை—ஞாயிறு, பிப்ரவரி 9, 1947. [ விலை. அணா 2

## ஹிந்துக்கள் குரான் வாசிக்கலாமா?

மகாத்மா காந்தியடிகள் ஜோபால் என்ற கிராமத்தில் ஜனவரி 29-தேதி நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் கீழ்க்கண்டவாறு பேசினார்:—

"முஸ்லிம் அல்லாதவர்கள் குரான் ஓதுவது தவறு அல்லவா என்றும் ஹிந்து வேதங்களுடன் குரானையும் ஓதுவது தவறு அல்லவா என்றும் முஸ்லிம் அல்லாதவர் குரானுக்கு வியாக்யானம் கூறுவது முஸ்லிம்களுக்கு பிடிக்கவில்லை என்றும் சிலர் என்னிடம் கூறினார்கள். நான் கடவுள் பக்தியில் சிறந்த முஸ்லிம் அம்மையார் ரெய்கானா டயாப்ஜியின் வேண்டுகோளின் பேரிலேயே குரானிலிருந்து சில சுலோகங்களை என்னுடைய பிரார்த்தனையில் சேர்த்துக் கொண்டிருக்கிறேன். அல்லாவின் திருநாமத்தைக் கூட முஸ்லிம் அல்லாதவர்கள் உச்சரிக்கக் கூடாது என்று கூறுவது மதப் பொறுமையின்மையின் சிகரமாகும் அல்லவா? குரானுக்கு நான் வியாக்யானம் கூறக் கூடாது என்று கூறுகிறார்களே, அதற்கு ஏற்கனவே நான்கு வியாக்யானங்கள் ஆதி காலத்திலிருந்தே ஏற்பட்டிருக்கின்றன அல்லவா? அவற்றுள் எது சரி எது தவறு என்று கூற முடியுமா? இங்குள்ள முஸ்லிம் மத குருக்கள் முஸ்லிம் அல்லாதவர்கள் குரானை ஓதவோ அர்த்தப்படுத்தவோ கூடாது என்று எண்ணுவார்களானால் அதை அவர்கள் பகிரங்கமாக சொல்லட்டும். அப்படிச் சொன்னால் நிலைமை சிக்கலாகி விடும். ஆனால் அதற்கும் நான் தயாராக இருக்கிறேன்.

நான் குரானை ஓதும் விஷயத்தில் எனக்கு எவ்வித அரசியல் நோக்கமும் கிடையாது. ஹிந்துக்களை நல்ல ஹிந்துக்களாக ஆக்கவும் முஸ்லிம்களை நல்ல முஸ்லிம்களாக ஆக்கவும் கிறிஸ்தவர்களை நல்ல கிறிஸ்தவர்களாக ஆக்கவும் நான் எப்பொழுதும் முயன்று வருகிறேன். நான் யாரையும் தம்முடைய மதத்தை விட்டு விடும்படியாக ஒரு பொழுதும் கூறியதில்லை. உலகத்திலுள்ள சகல மத சாஸ்திரங்களிலிருந்தும் சுலோகங்களை என்னுடைய பிரார்த்தனையில் சேர்த்துக் கொள்ளும் அளவுக்கு என்னுடைய மதமானது பரந்த நோக்கமுடையதாகும்.

இப்பொழுது இங்கே அக்கிரமம் செய்த முஸ்லிம்களுக்கு விரோதமாக ஹிந்துக்கள் தொடர்ந்திருக்கும் வழக்குகளை வாபீஸ் பெற வேண்டுமென்றும் இல்லாவிட்டால் அவை சமாதானம் உண்டாவதற்கு தடையாக இருக்குமென்றும் சிலர் கூறுகிறார்கள். கோர்ட்டுகளில் வழக்குத் தொடர்வது எனக்குப் பிரியமில்லாத காரியம் தான். ஆனால் அக்கிரமிகளை தண்டிக்க வேண்டும் என்று கூறுகிறவர்களுக்கு நான் அனுதாபம் காட்டாமல் இருக்க முடியவில்லை. கொலை செய்தவர்களை குற்றத்தை ஒப்புக் கொள்ளும்படி நீங்கள் கேட்டுக் கொள்ளலாம், ஆனால் அதற்காக கொலையாளிகளை தண்டிக்கக் கூடாது என்று சர்க்காரிடம் சொல்ல முடியாது. கோர்ட்டில் வழக்கு நடக்காமல் இருக்கும்படி செய்வதற்குரிய சரியான வழி யாதெனில் குற்றம் செய்தவர்கள் பகிரங்கமாக குற்றத்தை ஒப்புக் கொண்டு ஜனங்களுடைய தீர்ப்பை ஏற்றுக் கொள்ள தயாராக இருப்பது ஒன்று தான். அந்த மாதிரி செய்வதற்காக முஸ்லிம்கள் உழைப்பார்களானால் அதற்கு என்னால் இயன்ற உதவி முழுவதும் செய்யத் தயாராக இருக்கிறேன்."

## பணியற்க, உயிர் விடுக

மகாத்மா காந்தியடிகள் ஜனவரி 31 தேதி காலையில் அம்கி கிராமத்திலிருந்து நாபா கிராமத்திற்கு நடந்து போனார். போகும் வழியில் முஸ்லிம் ஒருவர் தம்முடைய வீட்டுக்கு வந்து போக வேண்டுமென்று காந்தியடிகளை அழைத்தார். அதற்காக அந்த முஸ்லிம் கிராம வாசி தம்முடைய வீட்டுக்கு முன்னால் ஒரு பந்தலை அமைத்திருந்தார். அவர் காந்தியடிகளை அந்த பந்தலில் உட்கார வைத்து ஒரு தட்டில் ஆரஞ்சு பழங்களை வைத்து அவரிடம் சமர்ப்பித்தார். காந்தியடிகள் அவற்றை எடுத்து தம்மைச் சூழ்ந்து நின்ற குழந்தைகளுக்கு கொடுத்தார். அவருக்குப் பின்னால் பீகாரிலிருந்து வந்திருந்த திரு. சாகே நின்று கொண்டிருந்தார். காந்தியடிகள் ஒரு ஆரஞ்சுப் பழத்தை எடுத்து கையில் வைத்துக் கொண்டு அவரைப் பார்த்து, 'நீர் பகைவராயிற்றே, உமக்குக் கொடுக்கலாமோ' என்று சிரித்துக் கொண்டு கேட்டார். ஆனால் நான் பகைவர்களையும் நண்பர்களாக ஆக்கும் வேலையில் ஈடுபட்டிருப்பதால் உமக்குக் கொடுக்கிறேன் என்று கூறி அவருக்குக் கொடுத்தார். காந்தியடிகளை அழைத்து வந்த முஸ்லிமும் மற்றவர்களும் காந்தியடிகளுடன் சேர்ந்து சிரித்தார்கள்.

அதன் பின் காந்தியடிகள் நாபா கிராமம் போய்ச் சேர்ந்தார். அங்கே ஒரு பெண்மணி "அக்கிரமிகள் மானபங்கம் செய்ய வந்தால் நாங்கள் தற்கொலை செய்து கொள்ளலாமல்லவா?" என்று கேட்டார். அதற்கு காந்தியடிகள் கீழ்க்கண்டவாறு பதில் கூறினார்.

"அக்கிரமிகளுக்கு அடிபணியக் கூடாது. அதைவிட தற்கொலை செய்து கொள்வதுதான் சரியானது. ஆனால் எந்தவிதமாக தற்கொலை செய்து கொள்வது என்பதைக் குறித்து நான் யோசனை சொல்ல முடியாது. தற்கொலை செய்து கொள்வதற்கு வேண்டிய மனோதைரியம் இருக்குமானால் அதையும் அதற்கு காரணமான மனத்தூய்மையையும் கண்டு அக்கிரமிகள் அஞ்சி விடுவார்கள்."

அந்தப் பெண்மணி "அக்கிரமியை கொல்வது அல்லது தன்னை மாய்த்துக் கொள்வது இந்த இரண்டில் எது நல்லது" என்று கேட்டார்.

அதற்கு காந்தியடிகள் கூறிய பதில்:—"தன்னைக் கொல்வதா அல்லது அக்கிரமியைக் கொல்வதா? எது சரி? என்று கேட்டால் தன்னைக் கொல்வது தான் என்று சந்தேகமறக் கூறுவேன்."

## அஹிம்சையின் சோதனை

மகாத்மா காந்தியடிகள் பிப்ரவரி மாதம் 1-தேதி அன்று நாபா கிராமத்தில் தங்கியிருந்த பொழுது சென்னை ஹிந்து பத்திரிகையின் நிருபர் 'தாங்கள் நவகாளி ஜில்லாவில் சமாதானம் உண்டாக்க முயன்று வருகிறீர்களே, எப்பொழுது வெற்றி பெற்றதாக எண்ணுவீர்கள்,' என்று காந்தியடிகளிடம் கேட்டார். அதற்கு காந்தியடிகள் கூறிய பதிலாவது:—

"இப்பொழுது நான் ஸ்ரீராம்பூரிலிருந்து புறப்பட்டு ஒரு மாதமாகப் போகிறது. நான் செய்து வரும் காரியம் மிகுந்த கஷ்டமானதாகும். இத்தகைய காரியத்தை இதற்கு முன் நான் மேற் கொண்டதில்லை. இப்பொழுதுதான் நான் அனுஷ்டித்து வரும் அஹிம்சையானது உண்மையிலேயே வீரர்களுடைய அஹிம்சைதானு என்று பரிசோதித்துப் பார்க்க ஆரம்பித்திருக்கிறேன். இதற்கு முன் பிரிட்டிஷ் அரசாங்கத்தை அஹிம்சையைக் கொண்டு எதிர்த்து வெற்றி பெற்று இருக்கிறேன். ஆனல் அதிகமான ஜனங்கள் எதிர்த்தால் ஜெயம் கிடைக்கும் என்ற எண்ணம் இருந்து வந்தபடியால் அந்த அஹிம்சை வீரர்களுடைய அஹிம்சை இல்லை என்றே எண்ணுகிறேன். நான் அஹிம்சையை இது வரை அனுஷ்டித்து வந்தாலும் உண்மையான வீரத்தைக் காட்டுவதற்கு இது வரை எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்ததில்லை. பெரும் பாலான ஜனங்கள் பகைமை பாராட்டும் இடத்தில் ஒரு சிலர் அஹிம்சையைக் கொண்டு வெற்றி பெற முடியுமா என்பதை பரிசோதிக்க நவகாளியானது தகுந்த இடமாகத் தோன்றுகிறது. ஜனப்பிரதிநிதித்துவம் உடைய சர்க்கார் நடப்பதால் பிரச்சினை சிக்கலுடையதாக இருக்கிறது. வங்காள மந்திரி சபையின் அரசியல் அபிப்ராயங்களுக்கும் என்னுடைய அரசியல் அபிப்பிராயங்களுக்கும் வித்தியாசம் உண்டு. அப்படியிருந்தாலும் ஜன நாயக சர்க்கார் ஒரு மாகாணத்துக்கு நன்மை தருவதாக இருந்தால் மற்ற மாகாணங்களுக்கும் நன்மையே தரும். ஆதலால் வங்காள மந்திரி சபையின் கௌரவத்தையோ அதிகாரத்தையோ குறைக்கக் கூடிய விதத்தில் நான் எதுவும் பேசவோ செய்யவோ மாட்டேன். அன்னிய அரசாங்கத்தோடு போர் தொடுப்பதில் எவ்வித கஷ்டமும் இல்லை. ஆனல் நம்முடைய தேச மக்கள் சரியான காரியத்தை செய்யவில்லை என்று கூறி அவர்களுடன் போர் தொடுப்பது என்பதை எண்ணிப் பார்க்கக் கூட எனக்கு கஷ்டமாய் இருக்கிறது. இந்த கஷ்டத்தினல் தான் நான் இங்கே பார்க்கவும் செய்யவும் காரியம் ஒவ்வொன்றையும் உடனுக்குடன் வங்காள பிரதம மந்திரிக்கு அறிவித்து வருகின்றேன்.

நான் நடக்க ஆரம்பித்தது முதல் ஒரு பக்கம் கோபமுள்ள சமூகத்தையும் ஒரு பக்கம் பயந்து போய் இருக்கும் சமூகத்தையும் பார்த்து வருகின்றேன். ஆதலால் பயந்து போய் இருக்கும் ஹிந்துக்களுக்கு மனோதைரியத்தை ஊட்டும் வேலையிலும் அதே சமயத்தில் பெரும் பான்மையோராக இருக்கும் முஸ்லீம்கள் சிறு பான்மையோராக இருக்கும் ஹிந்துக்களை காப்பாற்ற வேண்டியது கடமை என்று முஸ்லிம்கள் மனதில் பதியவைக்கும் வேலையிலும் ஈடுபட்டிருக்கின்றேன். இரண்டு சமூகத்தாரும் சகோதரர்களாக வாழும் விதத்தை போதிப்பதோடு அவர்கள் ஆரோக்கியமாகவும் சந்தோஷமாகவும் வாழ்வதற்கு உதவி செய்யக் கூடிய சுகாதார முறையையும் பொருளாதார முறையையும் கூறி வருகின்றேன்."

ஹிந்து நிருபர் :—"கிராமங்களை விட்டு ஓடிப் போன ஹிந்துக்கள் திரும்ப வந்து விட்டால் உங்கள் அஹிம்சை வெற்றி பெற்றதாக எண்ணுவீர்களா?

காந்தியடிகள் :—"அப்படி எண்ணமாட்டேன் ஹிந்துக்களை இரண்டே நாளில் திரும்பி வந்துவிடும்படி செய்ய முடியும். ஆனல் அதை வீரர்களின் அஹிம்சை வெற்றி பெற்று விட்டதற்கு அறிகுறியாகச் சொல்ல முடியாது. ஏனெனில் திரும்பி வருகிறவர்கள் திரும்பி வரும்படி சொன்னவர்களையே தங்கள் பாதுகாப்புக்கு நம்பி இருப்பார்கள். ஓடிப் போனவர்கள் மரணம் வந்தாலும் சரி பட்டினி ஏற்பட்டாலும் சரி எதையும் சந்தோஷமாக ஏற்போம் என்று எண்ணி தாங்களாகவே மனோதைரியத்துடன் திரும்பிவரத் துணிவார்களானல் அது தான் அஹிம்சையின் உண்மையான வெற்றியாகும். அந்த விதமாக நடைபெற வேண்டுமென்றே நான் ஹிந்துக்களிடம் கூறி வருகின்றேன்."

## நிலம் யாருக்குச் சொந்தம்

வங்காளத்தில் விவசாயிகள் தாங்கள் விளைவிக்கும் மாசூலில் பாதியை நிலத்தின் சொந்தக்காரர்களுக்கு கொடுத்து விட்டு பாதியை தாங்கள் வைத்துக் கொள்ளுகிறார்கள். இப்பொழுது அவர்கள் அது போதாது எங்களுக்கு மூன்றில் இரண்டு பாகம் வேண்டுமென்று கேட்கிறார்கள். அதற்காக 'இரு பாக இயக்கம்' ஒன்று நடந்து வருகிறது. அதைப் பற்றி காந்தியடிகளிடம் அபிப்பிராயம் கேட்ட பொழுது அவர் கூறியதாவது :—

"இந்த இயக்கத்தை நான் வரவேற்கிறேன். நிலமானது நிலச் சுவான்தாருக்கு சொந்தமானது அன்று. கடவுளுக்குத்தான் சொந்தம். அதனல் உழுது பயிரிடும் விவசாயிகளுக்கே சொந்தம். ஆதலால் உழுதுபயிரிடுபவர்களே மாசூலை அனுபவிக்க உரிமை உடையவர்கள். ஆனல் இந்த விஷயத்தில் எவ்வித பலாத்காரமும் உபயோகிக்கக்கூடாது என்று எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். இலட்சியத்தைப் போலவே அதை அடையும் சாதனமும் இருக்க வேண்டும் என்னும் கொள்கையை நான் பரிபூரணமாக நம்புகிறேன். இலட்சியம் நல்லதாக இருந்தால் போதும், அதை அடையும் சாதனம் எதுவாயிருந்தாலும் பாதகமில்லை என்று கூறுவது மிகவும் கேடான கொள்கை யாகும்."

## கேள்வியும் பதிலும்

கேள்வி :—இந்தியாவின் தற்காலப் பிரச்சினையை எப்படி தீர்ப்பது? பாகிஸ்தான் ஏற்படுத்துவதின் மூலமாகவா? அல்லது இரு சமூகங்களும் சண்டை போட்டா?

பதில் :—இந்த இரண்டு வழிகளும் நல்ல தில்லை. பாகிஸ்தானை சண்டை போட்டு பெற முடியுமென்று எண்ணுவது தவறு.

கேள்வி :—இந்தியா சுதந்திரம் அடைந்தால் எத்தகைய அரசாங்கங்கள் நல்லதாகும்?

பதில் :—இந்தக் கேள்வி நான் பதில் சொல்லக்கூடிய கேள்வி அன்று. சுதந்திரம் அடைந்த பின்பே இந்தக் கேள்விக்கு பதில் சொல்லக் கூடிய காலமாகும்.

கேள்வி :—தனியாக முஸ்லீம் ராஜ்யம் ஏற்படுத்துவதற்கு என்ன ஆட்சேபனை?

பதில் :—எனக்கு ஆட்சேபனை இல்லை, இப்பொழுது வங்காளம் தனி முஸ்லீம் ராஜ்யமாகத்தானே இருக்கிறது. ஆனல் நாம் கவனிக்க வேண்டிய விஷயம் யாதெனில், தனியாக ஏற்படுத்த விரும்பும் முஸ்லீம் ராஜ்யம் எப்படி இருக்கு மென்பதே யாகும். இது வரை அது தெளிவுபடுத்தப் படவில்லை. இந்தியா முழுவதற்கும் கேட்டை உண்டாக்கும் விதத்தில் அன்னிய நாடுகளுடன் உடன்படிக்கை செய்து

கொள்ளக் கூடிய சுதந்திரம தான் தனி முஸ்லீம் ராஜ்யம் ஸ்தாபிக்க விரும்புவதின் நோக்கம் என்று கூறினால் அதை ஒருநாளும் ஒத்துக்கொள்ள முடியாது. யாரும் தமக்கு விரோதமாக காரியங்கள் செய்வதற்கு சுதந்திரம் கொடுக்க ஒரு நாளும் ஒத்துக் கொள்ள முடியாது.

கேள்வி :—பாகிஸ்தான் கொடுக்காதிருப்பது சுதந்திர மடைவதற்கு தடையா யிருப்பதால் பாகிஸ்தானை கொடுத்து விடுவது நல்லதல்லவா ?

பதில் :—சுதந்திரம் அடைந்த பிறகுதான் பாகிஸ்தான் கொடுக்கும் விஷயத்தைக் கவனிக்க முடியும். லீக் கூட்டி கேட்பது அன்னிய அரசாங்கத்தின் உதவியை நாடுவதே யாகும். சுதந்திரம் அடைவதற்கும், பாகிஸ்தான் அடைவதற்கும் அன்னிய அரசாங்கத்தை அகற்ற வேண்டியது அவசியமான காரியமாகும். இந்தியாவானது சுதந்திரம் அடையும் வரை வேறு எந்த விஷயத்தையும் சிந்திக்க முடியாது.

கேள்வி :—இப்பொழுது பாகிஸ்தானும் ஏற்படவில்லை, சமாதானமும் ஏற்படவில்லை, என்ன செய்ய வேண்டுமென்று கூறுகிறீர்கள் ?

பதில் :—அதைக் கண்டுபிடிப்பதற்காகத்தான் நான் இங்கே நவகாளிக்கு வந்திருக்கிறேன். அதைக் கண்டு பிடித்தவுடன் அதை எல்லோருக்கும் கூறுவேன்.

## கோஷா முறை

மகாத்மா காந்தியடிகள் ஜனவரி மாதம் 15-ந் தேதி நாராயன்பூர் என்னும் கிராமத்துக்குச் சென்ற பொழுது ஒரு முஸ்லிம் கிராமவாசி வீட்டில் தங்கி இருந்தார். அவருக்கு அந்த வீட்டு பெண்களை காந்தியடிகள் கண்டு பேசவேண்டுமென்று ஆசை. ஆனால் அது நடைபெற வில்லை. அதைக் குறித்து காந்தியடிகள் அன்று மாலை நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் கூறியதாவது :—

" ஹிந்து பெண்கள் பிரார்த்தனைக் கூட்டங்களுக்கு ஏராளமாக வருகிறார்கள். அந்த விஷயத்தில் அவர்கள் முஸ்லீம் பெண்களை விட அதிக முன்னேற்றமுடையவர்களாக இருக்கிறார்கள். ஆனால் அதே காரணத்தினால் முஸ்லீம் பெண்களுடன் உறவு கொண்டாடி அவர்களை கோஷா என்னும் அடிமை விலங்கி லிருந்து விடுவிக்க வேண்டியது அவர்களுடைய கடமையாகும். இந்த கடமையைச் செய்யத் தவறினால் அவர்களிடம் ஏதோ ஒரு குறை இருக்கிறது என்பது தெளிவாகும்.

இந்தியா தேசம் சுதந்திர மடைய முயன்று கொண்டிருக்கிறது. ஆனால் ஜனத் தொகையில் பாதி பக்க வாதத்தால் பீடிக்கப்பட் டிருக்குமானால் ஜனங்கள் பெறக் கூடிய சுதந்திரம் ஒருநாளும் பரிபூர்ணமானதாக இருக்க முடியாது. ஆதலால் கோஷா முறையை சீக்கிரமாக ஒழித்து விட வேண்டுமென்று உங்களில் பெரியவர்களாய் இருப்பவர்களை நான் மிகுந்த பணிவுடன் வேண்டிக் கொள்ளுகிறேன். நான் இங்கே இப்பொழுது பார்த்து வரும் இந்த கோஷா முறையானது நபிநாயகத்தின் ஹிதோபசேதத்திற்கு முற்றிலும் விரோதமானதாகும்.

## அரசியல் நிர்ணய சபையும் முஸ்லீம் லீகும்

காந்தியடிகள் நாராயன்பூர் என்னும் கிராமத்தில் தங்கி இருந்த பொழுது, சில முஸ்லீம்கள் வந்து " நீங்கள் அஸ்ஸாமும் பஞ்சாப் சீக்கியர்களும் மாகாணத் தொகுதிகளி லிருந்து விலகி நிற்கலாம் என்று கூறுகிறீர்களே, அப்படியானால் முஸ்லீம் லீக் அரசியல் நிர்ணய சபையில் சேர்ந்து கொள்ள முடியுமா ?" என்று கேட்டார்கள்.

அதற்கு காந்தியடிகள் கூறிய பதில் வருமாறு :—

' என்னுடைய நோக்கத்தைப் பற்றி இன்னும் சந்தேகம் வேண்டியதில்லை. நான் சிறுவனாக இருந்த கால முதல் அறுபது வருஷ காலமாக ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையே என்னுடைய நோக்கமாக இருந்து கொண்டிருக்கிறது. அஸ்ஸாமும் சீக்கியர்களும் மாகாணத் தொகுதிகளி லிருந்தோ அல்லது அரசியல் நிர்ணய சபையிலிருந்தோ விலகி நிற்கலாம் என்று நான் கூறும் யோசனைக்கும் என்னுடைய நோக்கத்துக்கும் எவ்வித முரண்பாடும் இருப்பதாகத் தெரியவில்லை. பிரிட்டிஷ் மந்திரி தூதுகோஷ்டி திட்டம் யாரையும், நிர்ப்பந்தப் படுத்துவதாக இல்லை. எந்தக் கட்சியாரையும் அரசியல் நிர்ணய சபையில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கட்டாயப் படுத்த முடியாது. அரசியல் நிர்ணய சபைக்குள்ள சக்தி யெல்லாம் பொது ஜனங்கள் அதை ஆதரிப்பதே யாகும்.

ஆதலால் முஸ்லீம் லீக் அரசியல் நிர்ணய சபையில் சேர்ந்துக் கொள்ள முடியாதபடி நான் எந்த விதமான யோசனையையும் கூறி விடவில்லை. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தீர்மானத்தைப் படித்தேன். காங்கிரஸ் சபையானது தூது கோஷ்டி திட்டத்தைப் பரிபூர்ணமாக ஏற்றுக் கொள்ளுகிறது என்பது வெகு தெளிவாகத் தெரிகிறது.

முஸ்லிம் லீக் அரசியல் நிர்ணய சபையில் சேர்ந்து தங்கள் கட்சியை எடுத்து உரைத்து அதை ஏற்றுக் கொள்ளும்படி செய்ய முயல்வார்களென்று நம்புகிறேன். பிரிட்டிஷ் சர்க்கார்தான் அந்த சபையை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அவர்களிடம் ஆயுத பலம் இருக்கிறது. ஆதலால் பொது ஜனங்களுடைய ஆதரவு இருந்தால் தான் அந்த சபை அசையாது நிற்க முடியும், அந்த சபை சரியாக நடந்து கொண்டால் சில மாகாணங்கள் அதில் சேரா விட்டாலும் அரசியல் நிர்ணய சபை நடப்பதற்கு எவ்வித தடையும் இராது.

அஸ்ஸாமை வங்காளத்திலும், எல்லைப்புறத்தையும் சீக்கியர்களையும் பஞ்சாபிலும் சிந்துவிலும் ஏன் பலவந்தமாக சேர்க்க வேண்டும்? காங்கிரஸ் ஆனாலும் சரி லீக் ஆனாலும் சரி எந்த மாகாணமும் தங்களுடன் நிற்க வேண்டுமானால் அந்த மகாணங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் தங்கள் திட்டத்தையும் கொள்கையையும் மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும்."

## எத்தகைய குடிசை தேவை ?

மகாத்மா காந்தியடிகள் ஜனவரி மாதம் 31-தேதி நாபா கிராமத்துக்கு சென்ற பொழுது சர்க்கார் சகாய உத்தியோகஸ்தர் ஜனங்களுக்கு கட்டிக் கொடுக்கப்போகும் குடிசை ஒன்றை காட்டுவதற்காக காந்தியடிகளை அழைத்துச் சென்றார். குடிசையின் சுவர்கள் கறுப்பு வர்ணம் பூசிய தகடுகளாகவும் கூரை துத்தநாகத் தகடுகளாகவும் காணப்பட்டன. அதைப் பார்த்தவுடன் காந்தியடிகள் கூறியதாவது:-

" நீங்கள் என்னை ஒரு சிறு மாளிகையை பார்ப்பதற்காக அழைத்துச் செல்லுகிறீர்கள் என்று எண்ணினேன். ஆனால் அதற்குப் பதிலாக ஒரு தகரப் பெட்டியையே காட்டுகிறீர்கள். இதில் யாரும் குடியிருக்க முடியாது. இதில் குடியிருந்தால் வெயில் காலத்தில் பொரிந்து போக வேண்டியதுதான். ஓலைக் கூரை உள்ள குடிசைகள் தான் எந்தப் பருவத்திற்கும் ஏற்றவையாகும். அதுவும் தவிர இரண்டு நாளில் கட்டக் கூடியதாகவும் எஞ்சினியர் உதவியின்றி கிராமவாசிகளே கட்டக் கூடியதாகவும் இருக்க வேண்டும்."

சர்க்கார் சகாய உத்தியோகஸ்தர் அப்படியே செய்வதாக சொன்னார்.

**போர் செய்யாமல் எந்த தேசமும் சுதந்திரம் பெற்றதில்லை—காந்திஜி**

தமிழ் ஹரிஜன்

பிப்ரவரி 9, ஞாயிறு 1947

## முஸ்லிம் லீக் செய்ய வேண்டியது யாது

மகாத்மா காந்தியடிகள் பிப்ரவரி மாதம் 3-ந்தேதி சாதுர்க்கில் என்னும் கிராமத்தில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் கூறியதாவது :—

அரசியல் நிர்ணய சபையைப் பற்றி அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறது. காங்கிரஸ் தீர்மானம் உள்ளொன்று வைத்து புறம் பொன்று பேசுவதாகவும், அரசியல் நிர்ணய சபைககு நடந்த தேர்தல்கள் சட்ட விரோதமானவை என்பதாகவும் முஸ்லிம் லீக் கூறுகிறது.

ஒருவரை ஒருவர் அயோக்கியர் என்று கூறுவதும் பெரிய ஸ்தாபனங்கள் பரஸ்பரம் பகைவர்களாக எண்ணிக் கொள்வதும் நல்லதில்லை. அது ஒரு நாளும் நமக்கு சுதந்திரத்தை தராது. தேர்தல்கள் சட்டவிரோதமாய் இருந்தால் அதை கோர்ட்டில் கூறி தீர்மானித்துக் கொள்ளலாம். அப்படி செய்யாமல் குறை கூறினால் அதற்கு அர்த்தம் கிடையாது. கோர்ட்டுகளை நான் மதிக்கவில்லை என்று ஒத்துழையாமை காலத்தில் கூறியது போல முஸ்லிம் லீகும் கூறுமானால் சட்ட விரோதமானவை என்ற பேச்சை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

முஸ்லிம் லீக் அரசியல் நிர்ணய சபைக்குச் சென்று தங்கள் அபிப்பிராயத்தைக் கூறி தங்களுக்குச் சாதகமாக அதை திருப்ப முயல வேண்டும் என்றும் நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இப்படி செய்ய அவர்களுக்கு அபிப்பிராய மில்லையானால் அவர்கள் அரசியல் நிர்ணய சபை நியாயமாக நடக்கிறதா இல்லையா என்று காத்திருந்து பார்க்க வேண்டும். முஸ்லிம் லீக் பலாத்காரத்தை நம்பி இருக்கவில்லை என்றே நான் நம்புகிறேன். ஆதலால் அவர்கள் நான் கூறுகிறபடி செய்ய வேண்டியவர்களே ஆவார்கள். அதுதான் அவர்கள் தங்களுக்கும் தேசத்திற்கும் செய்ய வேண்டிய கடமை யாகும்.

அரசியல் நிர்ணய சபையானது ஜாதி ஹிந்துக்களுக்கு மட்டுமே பிரதிநிதித்துவம் வாய்ந்ததாக இருக்கிற தென்றும் முஸ்லிம் லீக் கூறுகிறது. ஆனால் அது தவறு. அரசியல் நிர்ணய சபையில் ஹரிஜனங்களும் கிருஸ்துவர்களும், பார்சிகளும், ஆங்கிலோ இந்தியர்களும், இந்தியாவின் புத்திரர்கள் என்று கருதுவோர் அனைவரும் இருக்கிறார்கள். டாக்டர் அம்பேத்காரும் பெரிய மனது பண்ணி அரசியல் நிர்ணய சபைக்கு சென்று வருகிறார். சீக்கியர்களும், அங்கே இருக்கிறார்கள்.

பிரிட்டிஷ் சர்க்கார் அரசியல் நிர்ணய சபையை கலைத்துவிட வேண்டுமென்று முஸ்லிம் லீக் கூறுகிறது. ஆனால் பிரிட்டிஷ் சர்க்கார் தங்கள் திட்டத்தை நாணயமான முறையில் நிறைவேற்றி வைப்பார்களென்றே நம்புகிறேன். அந்த நம்பிக்கை முன் போல் உறுதியாக இல்லை என்பதை ஒத்துக் கொள்ளுகிறேன்.

திட்டத்தை அனுசரித்து சில மாகாணங்கள் மட்டுமே சுதந்திரத்தை ஸ்தாபிக்க விரும்பினாலும் பிரிட்டிஷ் சர்க்கார் தங்கள் திட்டப்படி நடக்க கடமைப் பட்டவர்கள் என்பதை அவர்களிடம் சமர்ப்பித்துக் கொள்ளுகிறேன். இந்தியா தேசத்துடன் நாணயமாக நடந்து கொள்ளும் கௌரவத்தை பிரிட்டிஷ் சர்க்கார் இழந்துவிட மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

இந்தியா சுதந்திர மடைவதற்கு வழி பலாத்காரமன்று. பரஸ்பரம் நட்பு கொள்வதும் விட்டுக்கொடுப்பதுமே யாகும். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவரை ஒருவர் பகைவர்களாக எண்ணிக்கொள்ளலாகாது. முஸ்லிம் லீக் கூட பகைவர்களாக எண்ணும்படி சொல்லவில்லை.

அரசியல் சச்சரவுகளெல்லாம் அரசியல் தலைவர்களோடு நிற்கட்டும். அவைகள் கிராமங்களுக்கு வந்துவிடுமானால் பெரும் கேடேயாகும். உண்மையான பாகிஸ்தான் எப்படி யிருக்கும் என்பதை காட்டவே நான் நவகாளியில் இருந்து கொண்டிருக்கிறேன். வங்காளமானது ஹிந்துக்களிலும் முஸ்லிம்களிலும் பல அறிவாளிகளை உற்பத்தி செய்திருக்கிறது. தேசியப் போராட்டத்திலும் அதிகமாய் கலந்து கொண்டிருக்கிறது. ஆதலால் இப்பொழுது முஸ்லிம்களும் இந்துக்களும் நண்பர்களாகவும் சகோதரர்களாகவும் வாழ முடியுமென்பதை வங்காளமே விளக்கிக் காட்ட வேண்டியதாகும்.

### சமூகக் கொலைகள்

சமூகக் கொலைகள் சம்பந்தமாக பப்பாய் நிலைமை அதிகமாகத் திருந்தியிருப்பதாகத் தெரியவில்லை. அடிக்கடி சச்சரவுகள் நடை பெறுகின்றன. சர்க்கார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். இத்தகைய காரியங்கள் நடப்பதால் நகரத்தை அபிவிருத்தி செய்வதற்காக வகுக்கும் பெரிய திட்டங்கள் யாருக்கும் உற்சாகம் கொடுப்பதாக இல்லை. நகரத்தில் வசிப்பவர்களிடையே சண்டை சச்சரவுகள் நடந்துகொண்டிருக்குமானால் நகரத்தை அலங்காரம் செய்வதினாலும் விஞ்ஞானத்தால் கிடைக்கக் கூடிய வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளுவதாலும் என்ன பயன் உண்டாகும் ?

சமாதான கமிட்டிகளும் காங்கிரசும் லீகும் ஹரிஜன சங்கமும் சேர்ந்து விடுக்கும் வேண்டுகோள்களும் அக்கிரமங்களை தடுப்பதாய் தெரியவில்லை. போலீசார் அக்கிரமம் செய்கிறவர்களை கைதி செய்த போதிலும் அக்கிரமம் செய்யும்படி தூண்டுகிறவர்களை கைதி செய்வதாகத் தெரியவில்லை.

இதிலிருந்து நான் யூகிக்கக் கூடிய விஷயங்கள் வருமாறு:—

(1) சமாதான கமிட்டிகளிலுள்ளவர்களும் காங்கிரஸ் முதலிய ஸ்தாபனங்களிலுள்ளவர்களும் அந்தரங்க சுத்தியாக உழைக்க வில்லை. அல்லது அவர்களுக்கு செல்வாக்கு இல்லை. அல்லது அவர்களே அக்கிரமம் செய்யும்படி தூண்டுகிறவர்களாய் இருக்கிறார்கள்; அல்லது சமூக சச்சரவுகள் ஏற்படுவதை குறித்து சந்தோஷ மடைகிறார்கள்.

(2) போலீசார் லஞ்சம் வாங்குகிறார்கள்; அல்லது வகுப்பு வாத நோக்கம் உடையவர்களாய் இருக்கிறார்கள் அல்லது அக்கிரமம் செய்ய தூண்டுகிறவர்களை கைதிசெய்ய துணிவு இல்லாதவர்களாய் இருக்கிறார்கள். வேலை இல்லாமை, குடியிருக்க வீடு கிடையாமை, போதுமான உணவும் உடையும் கிடையாமை. கஷ்டமாய் இருப்பது, விலைவாசிகள் ஏற்றம், கள்ளமார்க்கெட், வகுப்பு சம்பந்தமான பிரசாரம் இவைகள் எல்லாம் சேர்ந்து பாமர மக்களை வகுப்பு வாரியாக பிரிந்து நின்று சண்டை போடும்படி செய்கின்றன. அரசியல் தலைவர்கள் தங்கள் சொந்த நன்மைக்காக இவர்களுடைய அறியாமையை பயன் படுத்தி சச்சரவுகளை உற்பத்தி செய்து விடுகிறார்கள்.

சர்க்கார் இந்த நிலைமையைச் சமாளிப்பதற்காக தண்டனை கொடுக்கும் சட்டங்களை இயற்றுகிறார்கள். அக்கிரமம் செய்கிறவர்களை அப்புறப்படுத்துகிறார்கள். போலீசையும் ராணுவத்தையும் உபயோகிக்கிறார்கள். எனக்கு தண்டனை கொடுக்கும் சட்டங்கள் பயன் தரும் என்ற நம்பிக்கை இல்லை. எந்தக் கொடிய தண்டனையும் குற்றங்களை தடுத்து விட முடியாது. செய்யப்படும் குற்றங்கள் ஒரு சிலவே கண்டு பிடிக்கப் படுகின்றன. அவற்றிலும் வெகு சிலவே தண்டிக்கப்படுகின்றன. பலமுறை தண்டனை பெற்றவர்கள் தண்டனைக்கு பயப்படுவதில்லை என்னுடைய வீட்டுக் குப்பையை அடுத்த வீட்டு வாசலில் கொட்டுவதால் எப்படி சுகாதாரம் உண்டாகாதோ அப்படியே அக்கிரமிகளை அயல் இடங்களுக்கு அனுப்பி விடுவதால் சமாதானம் உண்டாகாது. குப்பைகளை குப்பைத்தொட்டியில் கொட்டுகிறோம். அது நிறைந்தவுடன் வீதியில் சிதறுகிறது. காற்று அதை மறுபடியும் நம் வீட்டிற்குள் கொண்டு வந்து விடுகிறது. இது போல் தான் அக்கிரமிகளை சிறையிலடைக்கும் காரியமும் ஆகும்.

ஆனால் எந்த விதமான அரசாங்கமாய் இருந்த போதிலும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுவதற்கு பலாத்காரத்தை தவிர வேறு வழியில்லை என்று நம்புகிறவரையில் இந்த விதமாகத்தான் நடந்து கொள்ள முடியும். சர்க்கார் என்ன செய்வார்கள். ஜனங்களுடைய நம்பிக்கைப் பிரகாரம்தான் நடந்து கொள்ள முடியும். ஆதலால் சர்க்காரை குறை கூற முடியாது. ஆனால் இந்த முறைகளைக் கொண்டு அக்கிரமங்களைத் தடுக்க முடியாது என்பதை மட்டும் நிச்சயமாகக் கூறுவேன்.

(2)

அப்படியானால் நாம் செய்ய வேண்டியது யாது?

அமைதியை ஏற்படுத்துவது என்பது வெறும் தண்டிக்கும் வேலையும் தடை செய்யும் வேலையும் அல்ல, ஆக்க வேலையே ஆகும். எதிரியைப் பணிய வைத்து நம் இஷ்டம் போல் நடக்கச் செய்து விட்டவுடனே அமைதி ஏற்பட்டு விடாது. நட்பு உணர்ச்சி உண்டு பண்ணினால் தான் அமைதி ஏற்படும்.

அமைதியை ஏற்படுத்துவது ஆக்கவேலையாய் இருப்பதால் அதைச் செய்ய அரசியல் தலைவர்கள் ஏற்றவர்களல்ல. அரசியல் தலைவர்கள் அரசாங்கத்தை கைப்பற்றுவதிலேயே கண்ணாயிருப்பார்கள். ஏதேனும் ஆக்கவேலை செய்தாலும் அதனால் அடுத்த எலக்ஷனில் தங்களுக்கு என்ன நன்மை என்று எண்ணுவார்களே அன்றி ஜனங்களுக்கு என்ன நன்மை என்று எண்ண மாட்டார்கள். அரசியல் துறையில் ஏற்படும் சச்சரவுகளே சமூக சச்சரவுகளுக்கு காரணமாய் இருக்கின்றன. அதனால் அவர்கள் முழுமனதோடு அமைதி உண்டாக்க வேலைசெய்ய முடியாது. ஏதேனும் ஒருபொது விஷயத்துக்காக ஒன்று சேரும் சந்தர்ப்பம் ஏற்பட்டாலும் அப்பொழுதும் ஒருவர்க்கொருவர் சண்டையிட்டுக் கொண்டு மனக் கசப்பை அதிகப்படுத்திக் கொள்வார்கள்.

ஆதலால் அமைதியை உண்டாக்கும் வேலையை அரசியல் சம்மந்தமில்லாத ஸ்தாபனமே மேற்கொள்ள வேண்டும். அமைதியை உண்டாக்குவதையே வாழ்நாளின் இலட்சியமாகக் கருதுபவர்களே அந்த ஸ்தாபனத்தை நடத்தவேண்டும். அதை நடத்துகிறவர்கள் அரசியல் விஷயத்தில் கலந்து கொள்ளக் கூடிய சக்தி உள்ளவர்களாயிருந்தாலும் அதில் கலந்து கொள்ளக்கூடாது. அவர்கள் சாதாரண ஜனங்களிடையில் ஒற்றுமை உணர்ச்சியை உண்டாக்க வேண்டும். அக்கிரமிகள் என்று சொல்லப் படுகிறவர்களுடைய பொருளாதார நிலைமையை ஆராய வேண்டும். ஜனங்களோடு ஜனங்களாக பழக வேண்டும். ஜனங்களிடம் அரசியல் விஷயத்தைப்பற்றி பேசக்கூடாது. எலக்ஷன் விஷயங்களில் கலந்து கொள்ளக்கூடாது. பாகிஸ்தானைப் பற்றியும் அகண்ட இந்துஸ்தானைப்பற்றியும் பேசக் கூடாது. மதங்களைப்பற்றியும் பேசக்கூடாது. குஜராத்திலிருந்த திரு ரவி சங்கர் வியாசைப் போலவும் காந்தி சேவா சங்கத்தின் தலைவராயிருக்கும் அப்பா சாகேப் பட்டுவர்த்தனைப் போலவும் பயம் அறியாதவர்களாய் இருக்க வேண்டும். ஒற்றுமை உணர்ச்சியை உண்டாக்கவும் அதற்கான காரியங்களைச் செய்யவும் வேண்டும்.

இவ்விதம் செய்வதற்கு சாதாரண ஜனங்களுடைய அனுதாபமும் ஒத்துழைப்பும் அவசியமாகும். ஜனங்களில் பெரும்பாலோர் தேர்தல் சமயங்களில் ஏதேனும் ஒரு கட்சியை சேர்ந்தவர்கள் போல் தோன்றினும் இதர காலங்களில் எந்த கட்சியையும் சேராதவர்களாகவே இருக்கிறார்கள். அவர்கள் விரும்புவதெல்லாம் அமைதியும் பாதுகாவலும் தான். அவர்களுக்கு வேண்டியது இன்னதென்று அவர்களுக்கு நன்றாகத் தெரியும். பயமோ தடையோ இல்லாமல் நடமாடவும் வேலை செய்யவுமே அவர்கள் விரும்புகிறார்கள். அதனால் அவர்கள் அமைதியை உண்டாக்கும் விஷயத்தில் உதவிபுரியவே செய்வார்கள்.

இத்தகைய ஜனங்களுடைய உதவியையும் ஒத்துழைப்பையும் பெற முயல வேண்டும். தொண்டர்கள் அரசியல் கட்சி ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கக் கூடாது. மாணவர்கள் அரசியல் கட்சிகளில் சேராமல் இத்தகைய காரியங்களில் ஈடுபட்டால் நல்லது.

(3)

இதுவரை ஜனங்கள் செய்ய வேண்டிய காரியத்தைப் பற்றிக் கூறினேன். இனி சர்க்கார் செய்ய வேண்டிய காரியத்தைப் பற்றி கூற விரும்புகிறேன். சர்க்கார் தண்டனை செய்யும் அதிகாரத்தை உபயோகிப்பதை நான் விரும்பாத போதிலும் அவர்கள் அதை அறவே துறந்து விடுவார்களென்று எதிர்பார்க்க முடியாது. அதனால் நான் கூறுவதெல்லாம் அவர்கள் அந்த அதிகாரத்தை நன்றாகப்பயனளிக்கக் கூடிய விதத்தில் உபயோகிக்க வேண்டுமென்பதேயாகும். அக்கிரமங்கள் செய்யும்படி தூண்டுகிறவர்களையும் அவர்களுக்கு பணம் கொடுப்பவர்களையும் யோசனை கூறுகிறவர்களையும் ஆயுதங்கள் தருபவர்களையும் எவ்வளவு பெரிய பதவிகளில் இருப்பவர்களாயிருந்த போதிலும் கைதி செய்ய வேண்டும். விசாரணை சீக்கிரமாக நடத்தப்பட வேண்டும். இரண்டொரு குற்றவாளிகளை கண்டு பிடிப்பதற்காக இருபது முப்பது பேரை போலீஸ் ஸ்டேஷனில் கொண்டு போய் மணிக்கணக்காக வைத்திருக்கும் வழக்கத்தை விட்டுவிட வேண்டும்.

தண்டிக்கும் காரியங்களைச் செய்வதைவிட குற்றங்கள் செய்கிறவர்களுடைய கஷ்ட நிலைமையை மாற்றுவது தான் அதிக முக்கியமானதாகும். அவருடைய கஷ்டங்கள், பொருளாதாரக் கஷ்டங்களென்றும் மனத்தைப் பொறுத்த கஷ்டங்களென்றும் இரண்டு வகைப்படும். அவர்களுக்கு வேலை கிடைப்பதில்லை. வேலை கிடைத்தாலும் உணவுமுதலிய பொருள்கள் கிடைப்பதில்லை. உணவு முதலிய பொருள்களுக்கு பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் போதாது. பணமுடையவர்களும் கள்ள மார்க்கெட் வியாபாரம் செய்கிறவர்களும் உணவு முதலிய பொருள்களை ஏராளமாக உபயோகிப்பதை அவர்கள் பார்க்கிறார்கள். அதனால் பஞ்சமென்று சொல்வதெல்லாம் ஏழைகளை பட்டினி போடுவதற்காகச் செய்யப்படும் சூழ்ச்சியே என்று எண்ணுகிறார்கள். ஏழைகளைப் போலவே பணக்காரர்களுக்

அடிமை வருந்தும் இடமே மனிதனுடைய உண்மையான தாய் நாடு—லவல்

கும் உணவு முதலிய பொருள்கள் கிடைக்காமலிருக்குமானல் அவர்களுக்கு பணக்காரர்களிடம் கோபமுண்டாக மாட்டாது. மாமியாரிடம் கோபம் வந்தால் மருமகள் அவளை தண்டிக்க முடியாத காரணத்தால் மக்களை அடிப்பாள் அல்லது பானைகளை உடைப்பாள். அதுபோலவே ஏழைகள் பணக்காரர்களை ஒன்றுஞ் செய்ய முடியாததால் மற்ற ஏழைகளை துன்புறுத்த ஆரம்பிக்கிறார்கள். ஆதலால் ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் ஒரே விதமாக உணவு முதலியவை கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

அக்கிரமங்கள் செய்வதற்காக கிடைக்கக் கூடிய ஜனங்கள் சாதாரணமாக பண ஆசை உடையவர்களல்ல, அபாயகரமான காரியங்களைச் செய்வதிலும் மானபங்கம் செய்வதிலும் இன்பம் காணுகிறார்கள். சாதாரணமான வேலைகள் அவர்களுக்கு பிடிக்காது. அபாயகரமான வேலைகளையே அவர்கள் நாடுவார்கள். ஆதலால் அவர்களுக்கு அபாயகரமானதும் அதே சமயத்தில் ஜன சமூகத்திற்கு உபயோகமானதுமான வேலைகளைக் கொடுத்து அவர்களை அக்கிரமங்கள் செய்யாமல் தடுக்க வேண்டும். இந்த காரியத்தை அரசாங்கந்தான் செய்ய முடியும்.

பம்பாய் நகரத்தை லண்டன் போலவோ நியூயார்க் போலவோ செய்ய வேண்டுமென்று எண்ணுவது தவருன எண்ணம் என்பதை அரசாங்கமும் முனிஸிபல் சபையும் உணர்ந்து கொள்ள வேண்டும். பெரிய நகரத்தை உண்டாக்குவதற்கு பதிலாக பல சிறிய பட்டணங்களை உண்டாக்குவதே நல்லது. பெரிய பணக்காரர்கள் மட்டுந் தான் நகரங்களைத் தேடி வருகிருர்கள் என்பதில்லை. சிறைச்சாலைகளிலிருந்து விடுதலை அடையும் குற்றவாளிகளும் நகரங்களையே நாடி வருகிருர்கள். அவர்களும், இவர்களும் அப்படி வருவதற்கு ஒரே ஒரு நோக்கந்தான். அதாவது லாபம் அடைய வேண்டும். அதுவும் அதி சீக்கிரத்தில். அக்கிரமம் செய்கிறவர்கள் கிராமங்களிலும் சிறிய பட்டணங்களிலும் இருப்பதைவிட நகரங்களிலிருந்தால் அவர்கள் எளிதில் அகப்பட்டுக் கொள்ள மாட்டார்கள். குற்றம் செய்த உடனே வேறு வேஷம் போட்டுக் கொண்டு வேறு நகரத்திற்கு போய்விடுகிருர்கள். அநேக சந்தர்ப்பங்களில் ஹிந்துவைக் கொல்லும் முஸ்லிமும், முஸ்லிமை கொல்லும் ஹிந்துவும் ஒரே ஆளாகவே இருக்கக் காணலாம். அநேக சமயங்களில் ஹிந்து முஸ்லிம் ஹரிஜன் அக்கிரமிகள் ஒரே கூட்டமாக சேர்ந்திருப்பதையும் காணலாம்.

சமூக அரசியல் பிரச்னைகளைத் தீர்த்து விட்டால் சமூகங்களுக்கிடையே நடக்கும் கொலை பாதகங்கள் நின்று போகலாம். ஆனல அதைக் கொண்டு எல்லா கொலை பாதகங்களும் நின்று போகுமென்று எண்ண வேண்டாம். அந்த பாதகங்கள் சமூக சச்சரவுகள் ஆரம்பிப்பதற்கு முன்னலும் நடந்து கொண்டுதான் இருந்தன. அது போல் பின்னலும் நடக்கவே செய்யும். லண்டனிலும் நியூ யார்க்கிலும் நடக்கவே செய்கின்றன. அவற்றின் உண்மையான காரணங்கள் பொருளாதாரக் காரணங்கள் தான். அத்துடன் நகரங்களில் ஜன நெருக்கம் அதிகமாயிருப்பதையும் அபாயமான காரியங்களில் சிலர்க்கு ஆசை உண்டாவதையும் சேர்த்துக் கொள்ளலாம். சமூகங்களுக்கிடையே ஏற்படும் பகைமைகளை சந்தர்ப்பத்திற்கு தக்கபடி உபயோகித்துக் கொள்கிருர்கள்.

ஆதலால் பொது ஜனங்களும் சர்க்காரும் அக்கிரமங்களைத் தடுப்பதற்கு தண்டனை முறைகளை உபயோகிப்பதைவிட ஆக்கமுறைகளையே அதிகமாக உபயோகிக்க வேண்டுமென்று வற்புறுத்த விரும்புகின்றேன்.

கே. ஜி. மஷ்ரூவாலா

## வேண்டியது தானியம், பணமன்று

இந்தியா தேசத்தை விவசாய நாடென்று கூறுவது வழக்கம். அதைக் கொண்டு இந்தியாவில் விவசாய நிலம் ஏராளமாயிருக்கிறது என்று அர்த்தப் படுத்தினல் அது தவருகும். இந்தியாவில் சராசரியாக ஒவ்வொருவருக்கும் பிரித்துக் கொடுத்தால் கிடைக்கக் கூடிய விவசாய நிலம் ¾ ஏக்கரா ஆகும். ஆதலால் விவசாய தேசம் என்பதற்கு இந்திய மக்களுடைய பழக்க வழக்கங்கள் விவசாய வேலைகளுக்கு ஏற்றவை என்பதே அர்த்தமாகும். அதனுடன் தற்பொழுது இந்தியாவில் விவசாயத் தொழில்கள் அதிகமாக நடைபெறவில்லை என்றும் அர்த்தமாகும். எவ்வளவு வியசாய நிலம் தேவையோ அவ்வளவு விவசாய நிலம் இல்லாததால் விவசாயத்தை அபிவிருத்தி செய்வதிலேயே கண்ணும் கருத்துமாய் இருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. விவசாயத்தை கவனிக்கா விட்டால் எந்த விதமான நன்மையும் உண்டாக மாட்டாது. விவசாய நாடு என்பதற்கு இது மூன்ருவது பொருள்.

விவசாயத்தின் அவசியத்தை இந்திய மக்கள் உபநிஷத் காலத்திலிருந்தே அறிந்து வந்திருக்கிருர்கள். "தானியத்தை அதிகமாக விளைவியுங்கள். அதுதான் உங்களுக்கு நன்மை தரும்" என்று உபநிஷத்களில் ஒன்று கூறுகிறது. யுத்த காலத்தில் சர்க்காரும் இதே மந்திரத்தைத்தான் திருப்பித் திருப்பி சொல்லி வந்தார்கள். ஆனல் தானியத்தை அதிகமாக உற்பத்தி செய்ய தவறிவிட்டார்கள். அதற்குப் பதிலாக அதிகமான நாணயங்களையே உற்பத்தி செய்தார்கள். அதன் பயனக முப்பது லட்சம் ஜனங்கள் தானியப் பஞ்சத்தில் செத்து மடிந்தார்கள்.

இறுதியில் பிரிட்டிஷ் சர்க்கார் நஷ்டமடைந்துவரும் தங்கள் ஸ்தாபனத்தை ஜனத் தலைவர்களிடம் ஒப்புவித்தார்கள். நஷ்டமாய்வரும் ஸ்தாபனத்தை ஏற்றுக் கொள்வதால் உண்டாகும் அபாயத்தை அறிந்தபோதிலும் தலைவர்கள் ராஜியத்தை நடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிருர்கள். ஆகலால் இப்பொழுது செய்ய வேண்டிய பிரதானமான காரியம் ஜனங்களை சாகவொட்டாமல் தடுப்பதே ஆகும்.

விவசாயமானது இந்தியாவில் லாபந்தரும் தொழிலாயில்லை என்று வியாபாரிகள் கூறுகிருர்கள். ஆனல் மனித வாழ்வானது விவசாயத்தையே பொறுத்திருப்பதால் விவசாயம் லாபகாரமாயில்லாவிட்டால் மனித வாழ்வும் லாபகரமாயிருக்க முடியாது. ஆனல் இந்த நிலைமை இயற்கையானதன்று, செயற்கையான நாகரீகத்தின் விளைவேயாகும். இதன் சின்னம்தான் நாணயம். நாணயமுடையவர்கள் பெறும் கௌரவம் பொய்யான கௌரவமாகும். அதுதான் பலர் உயிர் துறப்பதற்கு காரணமாயிருக்கிறது.

இந்தியாவிலுள்ள ஜனங்களில் பெரும்பாலோர் வயல் காடுகளிலேயே வசித்து வருகிருர்கள். அங்கே நாணயத்திற்கு உண்டாயிருக்கும் பொய்யான மதிப்பை தொலைத்துவிட்டோமானல் விவசாயம் அபிவிருத்தி அடையாமலிருக்க முடியாது. பணத் திடமுள்ள மோகந்தான் பணந் தரக்கூடிய பயிர்களை உண்டாக்க ஏற்பட்டிருக்கும் வெறிக்குக் காரண

மாகும் புகையிலை, பருத்தி போன்ற பயிர்கள் உண்டாக்கப்படுவதற்கு இதுதான் காரணம். விவசாயி தனக்கு வேண்டியதை விலைக்கு வாங்க வேண்டி யிருக்கிறது. சந்தையில் போய் துணி, புண்ணாக்கு முதலியவைகளை வாங்க வேண்டியிருக்கிறது. அதனால் அவருக்கு பணம் தேவையாகிறது. ஆதலால் பிறர்க்கு வேண்டிய பணத்திற்காக தமக்கு வேண்டாத புகையிலை முதலிய பயிர்களை உண்டாக்குகிறார். அதன் காரணமாக உணவுப் பஞ்சம் ஏற்பட்டுவிடுகிறது. அத்துடன் கிராமங்களில் கைத்தொழில்களும் நடைபெறவில்லை. கிராமவாசிகளுக்கு வேண்டிய பொருள்கள் கிராமங்களில் உண்டாக்கப்படவில்லை.

நாம் விவசாயத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்பதிலும் அபிவிருத்தி செய்தால் அதிகமான லாபம் கிடைக்குமென்பதிலும் சந்தேக மில்லை. அதைச் செய்வதற்கு நம்முடைய சக்தியையும் அறிவையும் உபயோகப் படுத்த வேண்டும். ஆனால் விவசாயத்தை அபிவிருத்தி செய்யும் காலத்திலேயே ஜனத் தொகையும் பெருகி வரும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். ஆதலால் விவசாயிகள் நிலத்தை பயிர் செய்வது மட்டுமே நம்பி வாழ முடியாது பயிர் செய்யவும் வேண்டும். தனக்கு வேண்டிய பொருள்களை கைத் தொழில் மூலம் செய்து கொள்ளவும் வேண்டும். இதுதான் கதர் இயக்கத்திற்கும், கிராமக் கைத் தொழில் இயக்கத்திற்கும் அடிப்படையாகும். ஆகவே கதரையும் கிராமக் கைத் தொழில்களையும் அபிவிருத்திசெய்தாலன்றி ஏழைகளுக்கு விமோசனம் உண்டாகாது.

ஜனங்களுக்கு எவ்வளவு உணவு தேவை? அதைப் பெற என்ன செய்யலாம்? என்பதைப் பற்றி சர்க்கார் பலமாக ஆலோசனை செய்து வருகிறார்கள். ஒவ்வொரு வருஷத்திற்கும் தேவையான உணவை உண்டாக்கினால் மட்டும் போதாது. அடுத்த வருஷத்திற்குக் கொஞ்சம் மிஞ்சும்படியாகவும் உற்பத்தி செய்ய வேண்டும். காற்றும் ஜலமும் தேவைக்கு அதிகமாக கிடைப்பது போலவே உணவும் தேவைக்கதிகமாக உற்பத்தி செய்ய வேண்டும். தானியங்களை மட்டும் உற்பத்தி செய்தால் போதாது. காய்கறிகளையும், கிழங்குகளையும், பழங்களையும் உற்பத்தி செய்ய வேண்டும். அவைகளையும் பண நோக்கத்தோடு உற்பத்தி செய்யக் கூடாது. உற்பத்தி செய்கிறவரே அவற்றை உண்ண வேண்டும். அவருடைய தேவைக்குப் போக அதிகமாக உள்ளதையே விற்க வேண்டும், இதுதான் சுயராஜ்யம். "தானுண்டாக்கும் உணவை தானே உண்பவனை நான் வணங்குகின்றேன்" என்று துக்காராம் கூறுகிறார். தாம் பெற்ற மகனை யாராவது சந்தைக்குக் கொண்டு போய் விலை கூறுவார்களா? என்ன விலை கொடுத்தாலும் தம் மகனுக்குப் போதாது என்றே எண்ணுவார்கள். ஏனென்றால் மகனைப் பிரிந்து தகப்பன் இருக்க முடியாது. அப்படி யிருக்க தாமுண்டாக்கும் பாலையும் பழத்தையும் விலைக்கு விற்பது எவ்வளவு தவறான காரியம்? ஏன் விற்கிறாய் என்று கேட்டால் நான் அவைகளை உண்டால் என் காரியம் எப்படி நடக்கும் என்று விவசாயி கூறுகிறார்? இந்த நிலைமை ஏன் ஏற்பட வேண்டும்? கிராமக் கைத் தொழில்கள் இல்லாததுதான் இதற்குக் காரணம். ஏதோ இந்த விஷயத்தில் என்னை பயித்தியம் பிடித்தவனென்று சிலர் கூறலாம். ஆனால் வேறு காரணம் கூறாதவரை நான் கூறுவதே சரி என்று சொல்வேன்.

விநோபா.

## தினசரிக் குறிப்பு வைத்துக் கொள்க

கிராம ஊழியர்கள் ஒரு தவறு செய்கிறார்கள். அதை அவர்களுக்குக் கூற விரும்புகின்றேன். வெகு சிலரே ஒழுங்காக தினசரிக் குறிப்பு எழுதி வருகிறார்கள். இது சரியில்லை ஒழுங்காக தினசரிக் குறிப்பு வைத்துக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொருவரும் தினந்தோறும் தாம் செய்த வேலையையும் தம்முடைய அனுபவத்தையும் சுருக்கமாக எழுதி வர வேண்டும். கட்டுரை போல் எழுத வேண்டியதில்லை.

எழுதுவதின் மூலமாக சிந்தனை சக்தி அதிகமாகும். கஷ்டப்பட்டு வேலை செய்தும் அபிவிருத்தி அடையாத அநேக ஊழியர்களை அறிவேன். அவர்கள் அபிவிருத்தி அடையாததற்கு காரணம் அவர்கள் ஒரு பொழுதும் சிந்திக்காதிருப்பதே ஆகும். சிந்திப்பதென்பது சோம்பேறிகளுடைய பொழுது போக்கு என்றும் வேலை செய்கிறவர்கள் சிந்திப்பதில் காலத்தை வீணாக்க வேண்டிய அவசிய மில்லையென்றும் சிலர் கருதுகிறார்கள். இதிலிருந்தே இவர்களுடைய அறிவு வளர வில்லை என்று தெரிகிறது. அதனால்தான் அவர்களுக்கு சிந்திக்க வேண்டியதன் அவசியங் கூட விளங்காமலிருக்கிறது.

கிராமத்தில் ஊழியம் செய்யப் போகிறவர் முதலில் சிந்தித்ததனால் தான் கிராம சேவையை மேற்கொண்டார். ஆனால் அதை மேற் கொண்ட பின் சிந்திப்பதை அறவே விட்டு விட்டார். அதனால் அபிவிருத்தி எதுவும் அடையாமலிருக்கிறார். எந்த முதலைக் கொண்டு வியாபாரத்தை ஆரம்பித்தாரோ அந்த முதல் மட்டுமே இருக்கு மானால் எந்த வியாபாரமும் இருந்த நிலையில் இருக்குமே யன்றி அபிவிருத்தி அடையாது. "தினந்தோறும் வீட்டைப் பெருக்கி சுத்தம் செய்து ஒழுங்கு படுத்துவது போலவே நம்முடைய மனத்தையும் செய்ய வேண்டும்" என்று புத்த பிரான் கூறுகிறார். ஆதலால் ஒவ்வொரு நாளும் நாம் புதிய விஷயங்களை கற்க வேண்டும். சிந்தனை செய்ய வேண்டும்.

காந்தியடிகள் ஒவ்வொரு நாளும் புதுப் புது திட்டங்களையும் முறைகளையும் வகுப்பதை காண்கிறோம். அவர் எந்த விஷயத்தைப்பற்றியும் புதிது புதிதாக அபிப்பிராயங்கள் கூறி வருகிறார். அதற்குக் காரணம் அவர் தினந்தோறும் நன்றாக சிந்தித்து வருவதே ஆகும். சில ஊழியர்கள் காந்தியடிகள் எழுதிவருவதைக் கூட படிக்காமலிருந்து வருகிறார்கள். இது மிகவும் வருத்தம் தருவதாகும்.

ஒழுங்காகவும் அறிவுடனும் சேவை செய்ய விரும்பும் ஒவ்வொரு ஊழியரும் தினந்தோறும் படிப்பதற்கும் சிந்திப்பதற்கும் ஒரு நேரத்தை குறிப்பிட்டு வைத்துக் கொள்ள வேண்டும், இப்படி சிந்திப்பதற்கு ஒழுங்காக தினசரிக் குறிப்பு எழுதி வருவது நல்ல உபாயமாகும். அப்படிச் செய்து வந்தால் வெகு சீக்கிரத்தில் நல்ல பயனைக் காணலாம்.

விநோபா.


## ஒரு அறிவிப்பு

காந்தியடிகள் கால்நடைப் பிரயாண விபரங்களும் உபதேச மொழிகளும் படங்களுடன் உடனுக்குடன் கிடைப்பதற்காக அவருடன் செல்லும் பத்திரிகை நிருபர்களிடம் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். அடுத்த வாரம் முதல் கிடைக்கும் என்று நம்புகிறோம்.

நிர்வாக ஆசிரியர்.

அடி பரவும் பிரபுவைவிட நிமிர்ந்து நிற்கும் உழவனே உயர்ந்தவன்—பிராங்க்லின்

# காந்தியடிகள் கால்நடைச் சுற்றுப் பிரயாணப்படம்




காந்தியடிகள் தங்கிய கிராமங்களும் அவற்றிற்கு அவர் சென்ற தேதியும் :—

1. சந்திப்பூர் ஜனவரி 2 முதல் 6 வரை
2. மாஸிம்பூர் 7உ
3. பத்தேப்பூர் 8உ
4. தஸ்பாரா 9உ
5. ஜகத்பூர் 10உ
6. லம்சார் 11உ
7. கர்பாரா 12உ
8. ஷாப்பூர் 13உ
9. பத்தியால்பூர் 14உ
10. நாராயண்பூர் 15உ
11. தஸ்காரியா 16உ
12. பார்கோட் 17உ
13. அட்டக்கோரா 18உ
14. விராந்தி 19உ
15. கேத்தூரி 20உ
16. பனியாலா 21உ
17. தால்த்தா 22உ
18. முரைம் 23உ
19. ஹஸ்னுபாத் 24உ
20. மகமத்பூர் 25உ
21. பல்லா 26உ
22. பதல்கோட் 27உ
23. சாத்கில் 28உ
24. பாவோர் 29உ
25. ஜோயாக் 30உ
26. அம்கி 31உ
27. நவோரி பெப்ரவரி 1உ

அச்சடித்தவர் பி. அருணாசலம், கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மனைக்காரன் தெரு, ஜி. டி., சென்னை
பிரசுரித்தவர்: சின்ன அண்ணாமலை, தமிழ்ப்பண்ணை, 6/2 நாகேஸ்வரராவ் ரோடு தியாகராய நகர், சென்னை 17.
ஆசிரியர் : பொ. திருகூட சுந்தரம் ; நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை.